**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 474/2010**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW – 5/PW- 2 |
| Name | : திரு. மாயன் |
| Father/Husband's Name | : ருக்மாங்கதன் |
| Village | : நெ.46, பார்த்தசாரதி தெரு |
| Taluk | : பழைய வண்ணாரப்பேட்டை |
| Caste | : சென்னை |
| Calling | : |
| Religion | : |
| Age | : 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2026.

Accused produced from custody.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பழைய வண்ணாரப்பேட்டை சென்னையில் வசித்து வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 2006 ம் ஆண்டு சிடி பைக் என்ற தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். எங்கள் நிறுவனத்தில் பிரண்டில் சேல்ஸ் நடக்கும் நான் பேக் சைடில் பணிபுரிவேன். அப்போது யாரோ ஒரு நபர் 2 லாப்டாப்புகள் வேண்டுமென்று எங்கள் நிறுவனத்தில் கேட்டுள்ளார்கள். எங்கள் நிறுவனத்தார் 2 லாப்டாப்புகளை விற்பனை செய்து டெலிவரி செய்துள்ளார்கள். மறுபடியும் அதே நபர் 4 லாப்டாப்புகள் வேண்டுமென்று கேட்டு நிறுவனத்திற்கு வந்தார். மறுபடியும் லாப்டாப்புகளை விற்பனை செய்து டெலிவரி செய்துள்ளார்கள். அந்த விற்பனை தொகைக்கு அளிக்கப்பட்ட காசோலையில் ஏதோ பிரச்சனை என்று பேசி கொண்டார்கள்.

பின்னர் மேலும் 4 லாப்டாப்புகள் விற்பனை செய்து டெலிவரி செய்யப்பட்டுள்ளது. அந்த நபர் வங்கி கணக்கில் பணமிருப்பதாகவும், மீண்டும் காசோலையை தாக்கல்

செய்யுமாறு கூறி அவசரமாக லாப்டாப் வேண்டுமென்றும் அந்த லாப்டாப்புகளை பெற்று டெலிவரி செய்தால் தான் தனக்கு பணம் வரும் என்றும், அதனை நிறுவனத்திற்கு செட்டில் செய்வதாக கூறி அந்த நபர் லாப்டாப்புகளை வாங்கி சென்றார். அந்த டிரான்ஸ்ரக்ஷன் எனது மேனேஜர் கோட்டீஸ்வரன் மூலமாக நடந்தது. அதற்காக அந்த நபர் மீண்டும் காசோலை கொடுத்துள்ளார். அந்த காசோலையானது வங்கியில் போதிய பணமில்லையென்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து எங்கள் ஓனர் கேட்ட போது பணம் கொடுக்க முடியாது என்ன செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள் என்று அந்த நபர் கூறிவிட்டார். இது சம்மந்தமாக போலிசில் எங்கள் அதிகாரி புகார் அளித்தார். சுமார் ரூ.7 லட்சத்திற்கு மேல் அந்த தொகை இருக்கும். 14 லாப்டாப்புகளுக்கான தொகை வரவேண்டும். காசோலை கொடுத்த நபரை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

போலிஸ் விசாரணையில் நான் மேற்படி கூறிய விவரங்களை தான் கூறினேனா என்றால் ஆம். நான் கேள்விப்பட்ட விவரங்களை வைத்து தான் சாட்சியம் அளித்துள்ளேன் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிஸ் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் நடக்காத சம்பவத்திற்காக எனது உரிமையாளர் புகார் அளித்து அதில் ஒரு சாட்சியாக என்னை சேர்க்க வேண்டுமென்பதற்காக சேர்த்து தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.